பதிவு எண்: M. 6811 ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 23 (7—8—68) புதன் ★ வெளியூர்: ஆடி 24 (8—8—68) வியாழன் [இதழ்: 46

மாவட்டக் கல்வி அதிகாரிகள் பதவி

தமிழக அரசு உத்தரவு

★

சென்னை, ஆக. 7—

தமிழக அரசின் கல்வித் துறையில் தனி மாவட்டக் கல்வி அதிகாரி பதவிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, 'வட்டார இன்ஸ்பெக்டர்கள்' என்று இருந்துவந்த பெயரை மாற்றி, தற்போது அப்பதவிக்கு, 'தலைமைக் கல்வி அதிகாரி' என்று பெயர் வழங்கப்பட வேண்டுமெனத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

நெல் கொள்முதல் விலையை உயர்த்தும் கோரிக்கை....

அரசியல் பிரச்சினையாகிவிட்டது

தமிழக ஆளுநரின் கடும் கண்டனம்

காங்கிரசாரின் முரணான போக்கு அம்பலமாகிறது

விலைகளைக் குறைக்கும் அரசின் முயற்சியால் விவசாயிகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு

மதுரை, ஆக. 6—

"நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துவதென்பது இயலக்கூடியதல்ல; 'விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கச் செய்யவேண்டும்' என்பதைவிட, இது ஓர் அரசியல் பிரச்சினையாகிவிட்டது.

"கொள்முதல் விலையை உயர்த்தினால், அரசு இன்னும் அதிகம் தரவேண்டியிருக்கும்; அதே சமயத்தில், ரூபாய்க்குப் படி அரிசியும் தரவேண்டும்; இந்த இரண்டையும் ஒரே சமயத்தில் செய்வதென்பது இயலாததாகும்— அரசு இப்போது விலையை உயர்த்துவதென்பது தொல்லைமிக்க ஒன்றாகும்"

என்று, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், மதுரையில் ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர்கள்—சாகுபடியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாடுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்.

ஒன்றரை மணி நேரம் நடந்த இந்த விவாதத்தின்போது, திருமங்கலம் தொகுதி சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர், 'சாகுபடிச் செலவுகள் அதிகரித்திருப்பதால், நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்' என்றார்; உடனே ஆளுநர் அவர்கள்,

"நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்திவிட்டு, அதே நேரத்தில், மலிவு அரிசித் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கு எப்படி விரிவுபடுத்த இயலும்?"

என வினவினார்.

ஆளுநர் அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கோவையிலும், சென்னையிலும் ரூபாய்க்குப் படி அரிசி போடுவதால் மட்டும் ஆண்டுக்கு ரூ. 7 கோடி வரையில் நட்டம் ஏற்படுகிறது; தமிழகம் முழுவதும் இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் ஆண்டுதோறும் ரூ. 20 கோடி நட்டம் ஏற்படும்.

"'விவசாயி' என்ற முறையில் கொள்முதல் விலை உயர்வை நானும் வரவேற்கிறேன்; நெல் விலையை உயர்த்தினால் அரிசி விலையும் உயர்ந்துவிடும்; எனவே, வாங்கிச் சாப்பிடுபவர்களின் நலன்களையும் அரசு கவனத்தில் வைக்க வேண்டியிருக்கிறது.

"எல்லாப் பொருள்களின் விலைகளையும் குறைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது; இம்முயற்சி, விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்கத் தமிழக அரசு விவசாயிகளுக்கு உதவுவதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது; எனவே, பொறுக்கு விதைகளையும், உர வகைகளையும் தண்ணீர் வசதிகளையும் தாராளமாகக் கொடுத்து உதவி வருகிறது.

மாதந்தோறும் 3,500 குழாய்கள் ஏற்படுத்தவும நடப்பு ஆண்டில் மட்டும் மொத்தம் மூன்றரை இலட்சம் குழாய்கள் அமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

கிணறு தோண்டுவதற்குக் கடன் பெறுவதில் உள்ள சிரமங்கள்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமான பம்பு செட்டுகள் இருக்கின்றன; இதுவரையில் மூன்றரை இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் எல்லா நதிகளும் நீர்ப்பாசனத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுவிட்டன; இனி, தரைக்குக் கீழுள்ள தண்ணீரைத்தான் நம்பவேண்டியிருக்கிறது.

தமிழக விவசாய மக்களின் கடும் உழைப்பு, பாராட்டுதற்குரிய ஒன்றாகும். உற்பத்தி பெருகுவதற்கு புதிய விவசாய முறைகளைப் பயன்படுத்துவதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இரண்டு பங்கு அதிக விளைச்சலைத் தரக்கூடிய 'ஆடுதுறை 27' போன்ற பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தி, புரட்சிகரமான உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவது, பெருமைக்குரியதாகும்,"

இரயில்வே சொத்துக்கள் களவு

1980 பேர் கைது; 1,571 வழக்குகள் பதிவு

ஊழியர்களும் ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 6—

"கடந்த மூன்று மாத காலத்தில் 344 இரயில்வே ஊழியர்களும், 38 இரயில்வே பாதுகாப்புப் படை ஊழியர்களும் திருட்டு வழக்குச் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்"

என்று இரயில்வேத்துறை அமைச்சர் பூனச்சா மக்களவையில் தெரிவித்தார்.

"இரயில்வே சொத்துக்களைச் சட்டவிரோதமாக வைத்திருக்கும் சட்டம், கடந்த ஏப்ரலில் அமுலுக்கு வந்தபின், கடந்த சூன் 30-ம் நாள்வரை இந்தச் சட்டத்தின்படி 1,571 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன; 1,980 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்"

என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் தெரிவித்தார்.

"அண்மைக் காலங்களில் இரயில்வே சொத்துக்கள் களவாடப்படுவதும், இதர குற்றங்களும் பெருகிவிட்டன; இரயில்வே ஊழியர்கள் சிலரும் இதில் ஈடுபட்டிருக்கின்றனர்" என்றும் அவர் தெரிவித்தார்.

இரயில்வே பொருள்களைப் பாதுகாக்கும் பொறுப்பு

செ. கந்தப்பன் யோசனை

இரயில்வே சாமான்கள் திருட்டுப்போவது பற்றி நடைபெற்ற விவாவத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் செ. கந்தப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இரயில்வே சாமான்கள் திருட்டுப்போவது இப்போது அதிகரித்து வருகிறது; இரயில்வே பாதுகாப்புப் படை அமைக்கப்பட்ட பின்னர்தான் இந்தத் திருட்டுகள் அதிகரித்திருக்கின்றன.

"இந்தப் படை அமைக்கப்பட்டதால், 'இரயில்வே சொத்துக்களைப் பாதுகாப்பது நம்முடைய பணியன்று' என்று மாநில அரசுகள் கருதிக்கொண்டுவிட்டன; அதிக அளவில் திருட்டுகள் நடப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

"எனவே, இதுபோன்று திருட்டுப்போவதைத் தடுக்கவேண்டுமானால், இரயில்வே சாமான்களைப் பாதுகாக்கும் பொறுப்பை மாநில அரசுகளிடம் ஒப்படைக்க வேண்டும்; இதனால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் செலவை மத்திய அரசே தர வேண்டும்."

சுதந்தர நாள் விழாவில் கலந்துகொள்ள மறுப்பு!

கல்கத்தா, ஆக. 6—

வங்க அரசு தற்போது கடைபிடித்துவரும் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஆக. 15-ல் வங்க அரசு நடத்தவிருக்கும் சுதந்தர நாள் விழாவில் கலந்துகொள்ளுவதில்லை என்ற முடிவினை வங்க ஐக்கிய முன்னணி அறிவித்திருக்கிறது.

நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்காததேன்?

★

ஊழியர்களின் குறைகளைக் களைந்தெறிய அமைச்சர் முன்வர வேண்டும்

மக்களவையில் செ. கந்தப்பன் வற்புறுத்தல்

புதுடில்லி, ஆக. 6—

"தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்கவில்லையானால், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

"பாங்கி ஊழியர்கள், பாங்கிகள் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்வதற்குச் சில காரணங்கள் உண்டு; உரிய காலத்தில் தொழிலாளர் நல அமைச்சர், ஊழியர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவைகளைக் களைய முன்வரவேண்டும்"

என்று மக்களவையில், பாங்கிகளின்மீது சமூகக் கட்டுப்பாடுகளை விதிக்கும்வகையில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட பாங்கிகள் திருத்தச் சட்ட மசோதாமீது எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த திருத்தத்தின்மீது பேசுகையில், கழக உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் குறிப்பிட்டார்.

மசோதாவுக்கு எதிர்ப்பு— எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

எதிர்க் கட்சியினர் வெளிநடப்போடு இம்மசோதா நிறைவேற்றப்பட்டது; சுதந்தராக் கட்சியைத் தவிர்த்து மற்ற எல்லா எதிர்க் கட்சியினரும் இவ்வெளிநடப்பில் கலந்துகொண்டனர்.

"'பாங்கிகளில் பணியாற்றும் ஊழியர்கள், பாங்கிகளின் முன்னால் ஆர்ப்பாட்டமோ, கிளர்ச்சியோ மேற்கொள்ளக்கூடாது' என்று இம்மசோதாவில் உள்ள தகராறுக்குரிய பிரிவை நீக்கிவிட வேண்டும்"

என்று பி. சோ. உறுப்பினர் கொண்டுவந்த திருத்தத்திற்கு ஆதரவாக 53-வாக்குகளும், எதிராக 119-வாக்குகளும் கிடைக்கப்பெற்று எதிர்க் கட்சியினரின் திருத்தம் தோற்கடிக்கப்பட்டது.

3-மணி நேரம் வேலைநிறுத்தம்

இந்த மசோதாவுக்குப் பாங்கி ஊழியர்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும்வகையில், இந்தியா முழுவதும் உள்ள மாநில பாங்கிகளைத் தவிர்த்து மற்ற எல்லா பாங்கிகளும் இன்று காலை 10-மணி முதல் பகல் 1-மணிவரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன.

பல ஆண்டுகளுக்குப்பின் விலைகள் வீழ்ச்சி!

கல்கத்தா, ஆக. 5—

"பல ஆண்டுகளுக்குப்பின் முதல் தடவையாக மேற்கு வங்கத்தில், சூலை—ஆகஸ்டு மாதங்களில் உணவுப் பொருட்களில் விலைவாசிகள் கணிசமான அளவுக்கு இறங்கியிருக்கின்றன"

என்று, பதவி விலகும் உணவுக் கார்ப்பொரேஷனின் மேற்கு வங்கத் தலைவர் ஆர். கே. குப்தா கூறியிருக்கிறார்.

வழக்கமாக இந்த மாதங்கள், இங்கு நெருக்கடி மிக்க காலமாகும்.

உறுதிமிக்க தலைமை நாட்டிற்கு அவசியம்

அரசியலில் நிலவும் பலவீனத்தைச் சீர்திருத்துவது அவசியம்

அறியாமையுடன் சனநாயகம் கைகோர்த்துச் செல்வதை இனி அனுமதிக்க இயலாது

'சோழர்கள் காலத்திலேயே தமிழகத்தில் சனநாயகம் முகிழ்த்தது'-- ஹார்வர்டு பல்கலைக் கழகக் கருத்தரங்கில் முரசொலி மாறன் விளக்கம்

அமெரிக்கா சென்றுள்ள கழக நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள், ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் 24—7 68 அன்று நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆற்றிய உரை இங்கு தரப்படுசிறது:—

பெருமிதமிக்க சாதனை

உலகின் மிகப்பெரிய சனநாயக நாட்டிலிருந்து வருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியாகவும், தமிழ் நாட்டில் ஆளும் கட்சியாக விளங்கிவருவதும், அறிஞர் அண்ணு அவர்களின் ஒளிமிக்க தலைமையில் இயங்கி வருவதுமான தி.மு.க.-வைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்வதிலும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எங்கள் நாட்டின் மக்கள்தொகை-பிரேசில் நாட்டினுடையதைப் போல 6 மடங்கு; நைஜீரியாவைப்போல 9 மடங்கு; எகிப்தைப்போல 15 மடங்கு; கென்யாவைப்போல 50 மடங்கும் அதிகம்.

ஒவ்வொரு ஆண்டும் எங்கள் நாட்டில் அதிகரிக்கும் மக்கள் தொகை ஆஸ்திரேலியா அல்லது பெரு நாட்டின் மக்கள் தொகைக்கு ஈடானது; இருந்தும், சனநாயகக் கொள்கைகளை திறமையுடன் கையாண்டு வருகிற சாதனை பெருமையடையத் தக்கது.

பிரதிநிதித்துவ ஆட்சி தோற்றுவித்துள்ள நிலைமை

'பிரதிநிதித்துவ ஆட்சி' என்பது, நவீன சமுதாயத்துக்கான சில நிலைமைகளை எனது நாட்டில் தோற்றுவித்திருக்கிறது!

'இந்து சமூகம்' என்பது, 'சாதி' முறையை அடிப்படையாகக் கொண்டது.

'தீண்டாமை' என்னும் முறை வழங்கி வருவது, இந்து சமூகத்தைப் பற்றிய பல உண்மைகளில் ஒன்று; இங்குள்ள நீக்ரோக்களைவிட, அங்கு தீண்டாதவர் படும் துயரம் அதிகமாக இருந்தது.

தனிப்பட்ட ஒருவன் அடிமைகளை வைத்திருப்பதற்கு மாருக, ஒவ்வொரு கிராமமும் தங்களைச் சேர்ந்த தீண்டத்தகாத குடும்பங்களை ஒருவகையான கூட்டு அடிமைத்தனத்தில் வைத்திருந்தது.

ஆனல் இன்று அவர்கள் கவுரவமாக வாழ்கிருர்கள். வயது வந்தோர் வாக்குரிமையின் காரணமாக---சக்தி வாய்ந்த ஆயுதமான வாக்குச் சீட்டு அவர்கள் கையில் இருப்பதால் --- அவர்கள் எந்த உயர்ந்த அதிகாரத்திலும் பங்கு பெறுகிருர்கள்.

சனநாயகம் உயிர்ச் சத்துடன் விளங்க வேண்டுமானல்....

ஆனல் அரசியல் சனநாயகத்திஞல் மட்டும் திருப்தியடைந்துவிட முடியுமா -- இல்லை; சனநாயகம் என்பது, அரசியல் துறையில் செல்லுபடியாகும் போது பொருளாதாரத் துறையிலும் சனநாயகம் செல்லுபடியாகாதிருக்க ஒரு காரணமும் இல்லை.

இறுதியாக நாம் மக்களுடைய கருத்தையும் அறிய வேண்டும்; ஏனெனில், ஆளப்படுகிறவர் தான் இறுதி சக்தியாவார்கள்.

உதாரணமாக, என் நாட்டில் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி, வறுமையின் கீழ்த் தளத்தில் பசியால் -- பஞ்சத்தால் வாழ்கிறது!

சனநாயகம் என்பது, உண்மைகளை எதிர்நோக்குவதில் பெருமை கொள்வதாகும்!

சனநாயகம் தொடர்ந்து வெற்றி அடையவேண்டுமானல் -- இந்த உண்மைகளை எதிர்கொள்ள வேண்டும்; நமக்கே உரிய முறையில் போராடவேண்டும்.

இலட்சியத்தின் அடிப்படை

நவீன சமூகம் ஏற்படுத்தியுள்ள இரண்டு பிரச்சினைகளை இன்று பிரதிநிதித்துவ ஆட்சி சமாளிக்க வேண்டியுள்ளது; ஒன்று — பொது விவகாரங்கள்; மிகவும் ஆழமான முறையில் அவை சிககலாகிவிட்டன; இரண்டு— பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள இயலாதவர்களே மொத்த வாக்காளர்களில் அதிக சதவீதம் பேராக இருக்கிருர்கள்.

ஆனல், வயதுவந்த மனிதன் தனக்குச் சிறந்ததென்று தோன்றுவதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை பெற்றவன் என்பதே பிரதிநிதித்துவ அரசாங்கம் அமைததுள்ள இலட்சியத்தின் அடிப்படையாகும்; ஆனல், இது வெறும் யூகமாகவே இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

எப்படிச் சீர்திருத்துவது ?

திறமையைப் பொறுத்தும், யோக்கியத் தன்மையைப் பொறுத்தும் ஒரு தனி வாக்காளர் பெறுகின்ற தோல்விதான் சனநாயகம் என்கிற அரசியல் ஏற்பாட்டின் பலவீனமாக இருக்கிறது.

இதை எப்படிச் சீர்திருத்துவது? மக்களை மேலும் அறிவுள்ளவர்களாக எப்படி விளங்கச் செய்வது? மக்களை ஏமாற்ருதவாறு தலைவர்களிடத்தே மேலும் யோக்கியத்தன்மையை எப்படி வளர்ப்பது?

தெளிவான சனநாயகம் ஏன் காணப்படவில்லை?

இந்தப் பின்னணியில் எங்கள் நாட்டுத் தேர்தலைப்பற்றிக் கூற விரும்புகிறேன்.

கடந்த பொதுத் தேர்தலில் அங்கு 25-கோடி மக்கள் வாக்களிததார்கள்; அவர்களில் 17 கோடி பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்.

'அறியாமையுடன் சனநாயகம் கைகோர்த்துச் செல்ல முடியுமா?' என்று சிலர் கேட்கலாம்; எனது பதில், 'ஏன் முடியாது என்பதுதான்!

கல்வி என்பது உலகின் இந்தப் பகுதியில் பரவியிருக்கிறது.

வட மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய பகுதியில் சனநாயகப் பயிர் செழிப்பாக இருக்கிறது

உலகின் மற்றப் பகுதிகளில், 'மக்கள் சனநாயகம்'—'அடிப்படை சனநாயகம்'—'கட்டுப்பாட்டுச்குட்டட்ட சனநாயகம்' என்பன பற்றியெல்லாம் கேள்விப்படுகிருேம்,

நாம் புரிந்துகொள்ளும் அளவில் 'கலப்பற்ற தெளிவான சனநாயகம்' என்று இங்கெல்லாம் காண முடியவில்லை. இது ஏன்?

மக்கள் கருத்துக்குத் தலைசாய்த்தனர்!

சனநாயகம் செயல்படுவதற்கு அடிப்படையான தேவைகளில் ஒன்று—மரபுகளைக் காத்தல்; நம்மை அரசர்களும், அரசிகளும் ஆண்டிருந்தாலும், அவர்கள்கூட மக்கள் கருத்துக்குத் தலைசாய்த்தார்கள்!

சோழர்கள் காலத்திலேயே சனநாயகம் முகிழ்த்தது

கிறித்து சகாப்தம் தோன்றிய துவக்க கால நூற்றுண்டுகளின் போதே, தமிழ்நாடடில்-சோழ மன்னர்கள்--தங்கள் நாட்டை சிறு நிர்வாகப் பகுதிகளாகப் பிரித்தனர்.

ஒவ்வோரு கிராமத்திலும் கிராமத் தலைவரையும் அவருக்கு ஆலோசனை கூறும் அவையினையும் தேர்ந்தெடுத்தார்கள். இதற்கு மக்கள், ஒரு பொது இடத்தில் கூடி தங்களுக்குப் பிடித்தமானவர்களின் பெயரைப் பனை ஓலையில் எழுதி கருத்துத் தெரிவித்தனர்.

அறிவுத் திறனை எவரும் குறைத்து மதிப்பிட இயலாது

மேலும் சகிப்புத்தன்மையும், விசேடமான 'தனித்தன்மையும் வாய்ந்தவர்கள் நாம்' என்ற உணர்ச்சியும் எங்கள் சமூகத்தின முக்கிய குறியீடு ள் ஆகும்.

இந்த மனப்பக்குவம் தான், இந்தியாவில் ஆளும் கட்சி—எதிர்க்கட்சி இரண்டு அரசியல் ஆட்டத்தை விளையாட்டு வீரர்களைப் போல நடத்திச்செல்ல உதவுகிறது!

எங்கள் நாட்டு மக்கள் படிக்காமல இருந்தாலும் அவர்களின் அறிவுத் திறனை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. முக்கியப் பிரச்சினைகளில், 'நாம் எந்தப் பக்கம் இருக்கிருேம்' என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்!

உண்மையைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது

'மக்கள் கருத்து' என்கிற அடிப்படையின்மீதுதான் பிரதிநிதித்துவ ஆட்சி கட்டப்படுகிறது. ஆனல் நவீன சமூகம், மக்கள் கருத்தை, உருவாக்கம் நிலையிலேயே அரித்து விடுகிறது. இதனல், இக்காலத்தில், உண்மையைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது.

சில நாடுகளில் சிலர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, 'டெலிவிஷன் ஒரு காரணம்' என்றெல்லாம் நாம் கேள்விப்படுகிருேம்.

ஆபத்தையும் சில நேரங்களில் எதிர்நோக்க வேண்டும்

சில சமயங்களில், தவருன மனிதர்கள் சரியான முறை ஒன்றின் மூலமே தேர்ந்தெடுக்கப்படலாம். இந்த ஆபத்தையும் சனநாயக ஆட்சி சில நோங்களில் எதிர்நோக்க வேண்டும். அதிலும், 'நலன விளையுமா' என்று பார்க்க வேண்டும் ஏனெனில், சனநாயக முறை தவிர்த்து வேறு முறைகளின் மூலம் சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சிகள் படுதோல்வியடைந்துவிட்டன.

உலகின் இரு பிரிவுகள்

இதுவரை சொன்னதெல்லாம், வாக்காளர்களைப் பற்றித்தான்; ஆனல், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதநிதிகளின் நிலை எனன?

இந்த உலகம், 'உழைப்பாளிகள்—நிபுணர்கள்' என்ற இரு பிரிவாக இருக்கிறது. இதில், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிபுணர்களா? அல்லது எல்லாம் தெரிந்தவர்களா? நான் அவ்வாறு கருதவில்லை. அப்படி இருக்குமானல் மேலும் அதிக தோல்வியே ஏற்படும்.

நாடாளுமன்றத்திற்கு அந்த வலிமை இருக்கிறதா?

'அரசியல்' என்பது, மனிதர்களை கையாளும் ஒரு கலை.

'சட்டமன்றம்' என்பது, நிபுணர்கள் கூடும் இடமல்ல; மக்களின் கருத்து வேகத்தால் இங்குமங்கும் தள்ளப்பட்டு அவர்களுடைய தலைவர்கள், 'தகுந்தது' என்று கூறும் கொள்கைகளை ஒப்புக்கொள்ள வைத்த சாமானிய மனிதர்கள்--சராசரி மனிதர்கள் அமரும் இடம் அது; ஏனெனில், நாடாளுமன்றத்தின் நடுநாயகமான வலிமை நாடாளுமன்றத்திற்குள் இருப்பதில்லை--வெளியேயுள்ள மக்களிடம்தான் இருககிறது!

முறைப்படுத்தி ஒளியூட்ட யார் முன்வருவது?

நவீன சமூகத்தின் மற்ருெரு அம்சம், அதன் அமைதியற்ற தன்மையாகும், அரசை மாற்ற 5 ஆண்டுககாலம் காத்திருக்க அது தயாராக இருப்பதில்லை.

ஜான் ஸ்டுவட் மில் சொன்னதைப் போல, சில சமயங்களில், 'பொதுமக்கள் கருத்து' என்பது, தனி மனிதனுக்குக் கொடுங்கோன்மையாகவும் தோன்றும்!

எனவே, அதனை முறைப்படுத்தி ஒளியூட்டியாக வேண்டும்; யார் இதனைச் செய்வது — சக்தி வாய்ந்த தலைமைதான்.

உலகச் சரித்திரத்தின் அடுத்த அத்தியாயம்

உலகச் சரித்திரத்தின் அடுத்த அத்தியாயத்தை எழுதுவதில் தனி மனிதன், சிறப்பான டங்கு ஆற்றவேண்டியிருக்கும்" என்று புகழ் பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் டாயின் பீ கூறுகிருர்.

அத்தகைய தலைமைக்குத் தேவையான நான்கு தகுதிகளை அவர் கூறுகிருர்:—

1. எதிர்காலத்தை உய்த்துணரும் தன்மை.
2. நடுநிலைத் தன்மையும் நிதானமும்; பல கொடுமையான சர்வாதிகாரிகளுக்குக்கூட எதிர்காலத்தை உணரும் தன்மை இருந்தது; அவர்களிடம் நடுநிலைத் தன்மையும் நிதானமும் இருந்தது.
3. பொறுமையும் முட்டாள்களின் செயல்களைச் சகித்துக்கொள்ளும் தன்மையும் வேண்டும்; இதைத் தியாகமாகக் கருதிச் செய்யக் கூடாது; அதனை ஒரு நுண்கலை போலக் கருதிச் செயல்பட வேண்டும்.
4. தொடர்ந்து ஒன்றில் உறுதியாக நிற்பது அவசியம்.

எனவே, இப்போது தலைமை என்பதே பிரச்சினையின் முக்கியப் பகுதியாக இருக்கிறது; அத்தகைய தலைமைக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதாக நான் நினைக்கவில்லை.

மனிதனின் கூறிய மதி கண்டு பிடித்துவிட்டதா?

'பிரதிநிதித்துவ ஆட்சி' என்பது, குறையற்றதா -- இல்லை.

நாடாளுமன்றம் என்பது, அமைச்சரவையின் செயல்களைப் பதிவு செய்யும் உறுப்பாக இருக்கிறது. அமைச்சரவையின் விருப்பமே அங்கு செல்லுபடியாகிறது. பல நேரங்களில் ஏதேனும் ஒன்றை எதிர்ததோ, ஆதரித்தோ வாககளிக்கும்படி நம்மை எச்சரிககிருர்கள்.

அப்படியானல், பிரதிநிதித்துவ ஆட்சிக்கு மாற்று ஆட்சி ஒன்று இருககிறதா—இல்லை!

மனிசனின் கூரிய மதி, மற்ருெரு மார்க்கத்தைக் கண்டுபிடிகக வில்லை!

பேராசிரியர் ஹெரால்டு லாஸ்கியின் வாசகம் ஒன்றை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:—

"சனநாயக அரசாங்கத்தை ஆதரித்துப் பேசிப் பத்து நிமிடமகூட தாக்குப் பிடிக்க முடியாது என்பதை நான் அறிவேன்; ஆனல் மாற்று முறைகளோ 5 நிமிட குறுககுக் கேளவிகளைக்கூடத் தாங்கும் சக்தியற்றவை என்பதையும் நான் அறிவேன்."

கேள்விகட்குப் பதில்

கூட்ட முடிவில், கூட்டத்தினர் கேட்ட கேள்விகளும் அதறகு முரசொலி மாறன் அளிதத பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"இந்தியாவில் சனநாயகம் தழைத்திருப்பதாகச் சொல்கிறீர்கள்; ஆனல், ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்திற்கு உணவு வழங்க மறுக்கிறது; இதற்கு என்ன பொருள்?"

பதில்:—"இந்தியா பல மொழிகள், பல பழக்க வழக்கங்கள் கொண்ட கூட்டாட்சி என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான். இப்படிப்பட்ட பிரச்சினைகள், கூட்டாட்சி முறை இருக்கும் உலகின் எல்லா நாடுகளிலும் சாதாரணமாகவே இருப்பதுதான்; இருந்தாலும், எங்கள் நாட்டு அரசு, இதை நல்லவிதமாகத் தீர்க்க முனைந்திருக்கிறது. கூட்டாட்சி முறையில் இ பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்த்துவிட முடியாவிட்டாலும், முழு அளவும தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

கே:—"இந்தியாவில் நவீன நிலைமைகள் -- அதாவது, கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி காரணமாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் என்ன? அவைகளை எப்படித் தீர்க்கிறீர்கள்?"

ப:—"இந்திய சமுதாயம், கூட்டுக் குடும்ப முறையை அடிப்படையாகக் கொண்டது. கலவி வளர்ச்சி—தொழில் வளர்ச்சி—நகரங்கள் உற்பத்தி காரணமா அந்த முறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கல்வி வளர்ச்சியில் என்ன பிரச்சினைகள் என்ருல், கிராமங்களில் கொஞ்சம் கல்வி கற்ருல் முதலாவதாக அவன் தன் தொழிலைவிட்டு வெளியேறுகிருன்; இன்னும் கொஞ்சம் அதிகம் கல்வி கற்ருல் ஊரைவிட்டே வெளியேறுகிருன்; மேலும் அதிகம் கல்வி கற்ருல் நாடடைவிட்டே வெளியேறுகிருன்; இத்தகைய பிரச்சினைகளைத்தான் சமுதாய மேம்பாட்டைக் குறிக்கோளாக வைத்து

(3-ம் பக்கம் பார்க்க)

உள்ளாட்சி மன்றங்களில் அரசியல் வேண்டாம்!

கட்சியை மறந்து ஊர் நலனில் கவனம் செலுத்துக

கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அறிவுறுத்தல்

பெரியநாயக்கன்பாளையம், ஆக. 5—

"ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சிமன்றங்களிலும் கட்சிப் பாகுபாடு இல்லாது பணியாற்ற வேண்டும்; ஒன்றியங்களில் கட்சியைப் புகுத்தினுல் நிர்வாகம் சீர்குலைந்துவிடும்.

"ஊராட்சி மன்றம் என்பது பொதுமக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டு—அவற்றை முறைப்படி தீர்ப்பதற்காகவே இருக்கின்றன; அதை விட்டுவிட்டு ஊராட்சி மன்றங்களில் கட்சி தலையிடுமானுல் நிர்வாகம் சீராக நடைபெறுது!

"எடுத்துக்காட்டாக, ஒன்றியங்களிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி ஒரு சாலை போட வேண்டுமென்றுல், அந்தத் தொகைக்குள் சாலையைப் போட்டு முடித்துவிட வேண்டும்; இதிலே கூட ஒரு கட்சி, 'சிமெண்டு ரோடு போட வேண்டும்' என்றும் இன்னுெரு கட்சி தார் ரோடு போட வேண்டும்' என்றும் கூறினுல், மககளுக்குப் பணியாற்ற முடியாது"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுக்கரை ஊராடசி ஒன்றியத்தின் புதிய அலுவலகக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டுமென்றுல, 30 ஆயிரம் கிணறு ள் வெட்ட எங் ளால் தீர்மானம் தான் போடமுடியும்; 'அந்தக் கிணறு வெட்டப்பட்டதா இல்லையா' என்று பாாக்க முடியாது.

அதிகாரிகள் எங்களுக்கு அனுப்புகின்ற 'பைல்'கள்தான் எங்களிடம் பேசுமே தவிர, நிலைமைகளை நாங்கள் ஒவ்வொ ரி மாகச் சென்று நேரே பார்க்கமுடியாது.

அரசினரால் போடப்படும் திட்டம் சரியாகச் செயல்படுகிறதா இல்லையா என்பதைப் பொது மக்கள் தான் கண்காணிக்க வேண்டும்.

பொதமக்களின் நிலைமைகளையும், குறைகளையும் தெரிந்து கொள்வதற் ாகததான் ஊராட்சி மன்றங்களு ் ஒன்றியங்களும் இருக்கின்றன.

எனவே, கட்சி வேறுபாடுகளை மறந்து, 'பொது மக்களின் வரிப் பணம்' என்ற பொறுப்போடு ஊராட்சி மன்றங்கள் பணியாற்றவேண்டும்."

அண்மை நாடுகளின் 100 குழந்தைகள்

காந்தியார் நூற்றுண்டு விழாவில் அணிவகுப்பர்

புதுடில்லி, ஆக. 5—

இலங்கை, மலேசியா, பர்மா போன்ற அண்மை நாடுகளைச் சேர்ந்த நூறு குழந்தைகள் 'காந்தி' நூருவது பிறந்த நாள் அன்று ராஜக் கட்டத்தில் அணிவகுதது மரியாதைச் செலுத்துவர்.

இக்குழந்தைகள், இதற்கென்று அமர்த்தப்பட்ட விமானங்களில் அழைத்து வரப்படுவார்கள்.

இந்தியா, பர்மா, இலங்கை, மலேசியா குழந்தைகளிடையில் நல்லுறவும், நட்பும் வளரவேண்டுமென்பதற்கான ஏற்பாடு இது; இதற்கான செலவை இந்தியத் தேசியக் கல்வி அறக்கட்டளைக் குழு ஏற்றுக்கொள்கிறது.

காந்தியார் வாழ்க்கையை விளக்கும் கண்காட்சி இரயில்

நாடு முழுவதும் சுற்றும்

காந்தியார் வாழ்க்கையையும், போதனைகளையும் விளக்கும் கண்காட்சிகளைக் கொண்ட இரண்டு இரயில் வண்டிகள் தயார் ஆகின்றன.

காந்தியார் நூற்றுண்டு விழா வினையொட்டி இந்த இரயில் வண்டிகள் ஆறு மாதங்களுக்கு நாடு முழுவதும் சுற்றி வரும்.

ஒன்று பிராட்கேஜ் மூலமாகவும், மற்ெருன்று மீட்டர்கேஜ் வழியாகவும் செல்லும்.

மறுபரிசிலனை செய்ய இயலாதாம்

புதுடில்லி, ஆக 5—

"துணிக் கட்டுப்பாட்டை முழுவதுமாக நீக்குவது குறித்து மீண்டும் பரிசீலனை செய்யத் தற்போது அரசு எண்ணவில்லை"

என்று வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

உறுதிமிக்க தலைமை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சனநாயக முறையில் தீர்க்க முனைந்திருக்கிறேம்."

அறிமுகம்

கருத்தரங்கில் ஒவ்வொரு புதன் கிழமையும் கூட்டம் நடைபெறும். நானகுபேர் பேசவேண்டும்.

24—7—68 அன்று இரவு 8 மணிக்கு பல்கலைக் கழகத்தின் மெர்சன் மண்டபத்தில் கூட்டம் நடந்தது. இககூடடத்தில் முரசொலி மாறனுடன் இங்கிலாந்து இஸ்ரேல், நெதர்லாண்டு நாடுகளைச் சேர்ந்த எம்.பி-க்களும் பேசினர்.

"பிரதிநிதித்துவ அரசாங்கமும் நவீனகால சமூகத்தின் பிரச்சினைகளும்" என்பது முரசொலி மாறனின் பேச்சுக்கான தலைப்பாகும், அவரது பேச்சை அனைவரும் பாராட்டினர்.

பேராசிரியர் பிரவுன் என்பவர் முரசொலி மாறனை அறிமுகப் படுத்தி பேசியதாவது :—

"திரு முரசொலி மாறன், இந்தியாவிலிருந்து வந்திருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் நாட்டை ஆளுகின்ற தி. மு. க-வைச் சேர்ந்தவர்; இந்தியாவின் நிதியமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும்; அவர் நமது பல்கலைக் கழகத்திற்கு வந்துபேசியது நினைவிக்கலாம்; அவருடைய தொகுதியிலிருந்து திரு மாறன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

"இந்தியவிலேயே படித்தவர்கள் அதிகம் நிரம்பிய தொகுதிகளில் தென் சென்னையும் ஒன்று திரு. மாறன் எம்.பி மட்டுமல்ல—பொருளாதாரம் பயின்ற மாணவர்; 'முரசொலி' தமிழ்த் தினசரியின் ஆசிரியர்; சிறந்த திரைப்பட வசனகர்த்தா—திரைப்படத் தயாரிப்பாளர் — திரைப்பட டைரக்டரும்கூட."

சிசர்ஸ் போட்டியில் சேருங்கள்—

முகச்சாயலைப் பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்

பெறுவீர்

ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

1

2

3

4


நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

இந்த பத்து முகச்சாயல்களும் 10 பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. இவர்களில் ஐவர் பம்பாய் திரைப்பட நடிகர்கள். நால்வர் தென்னிந்திய திரைப்படங்களிலும், ஒருவர் கிழக்கு இந்திய திரைப்படங்களிலும் நடிப்பவர்கள். "பெயர்களை இங்கே எழுதுங்கள்" என்று குறிப்பிட்டுள்ள கட்டத்தில், '1'க்கு அடுத்த காலியான இடததில் முகச்சாயல் '1' என்று குறிப்பிடப்பட்டுள்ள நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் '1' 'விமி' என்ற திரைபபட நட்சத்திரத்தினுடையது என்ருல் கட்டத்தில் '1' எண்ணுக்கு அடுத்த காலி இடத்தில் 'விமி' என்று எழுதுங்கள்.) இதே மாதிரி '1' முதல் '10' வரையுள்ள எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். அவ்விதம் செய்த பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் எழுதி, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் பாக்கெட்டுகளையும் அடக்கம் செய்து இந்த அறிவிப்பில் கண்ட முகவரிகளில் ஒன்றுக்கு அனுப்புங்கள்.

முக்கிய விதிகள்:

இப்போட்டியில் கலந்துகொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்குத் தகுதியுடையவராகார்.

சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்புவதற்கான பாரங்களில் முழு விதிகளும், நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

5 6 7 8 9


10

முடிவு தேதி செப்டம்பர் 30, 1968

இங்கே கத்தரிக்கவும்

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

1.	6.
2.	7.
3.	8.
4.	9.
5.	10.

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப் பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ....

முகவரி ....

....

....

வயது .... தொழில் ....



சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப் படுகிறது.

இசைக் குழு முகவரி

டேப் இராமச்சந்திரன்—ப. இராசப்பா பங்கேற்கும் கழகக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க :—

டேப் இராமச்சந்திரன்—
இராசப்பா இசைக் குழு,
15, ஆஞ்சநேய நகர்,
இண்டாவது சந்து,
இராயபுரம், சென்னை-13.

தெலுங்கு மொழியில் அண்ணு மணிவிழா மலர்

அறிஞர் அண்ணுவி ் 60-வது பிறந்த நாள் விழ வினையெட்டி அவரது புகழையும் சிறப்பையும் ஆந்திர மக் ளும் அறிந்து—அவரது தலைமை தமிழகத்திற்கு மட்டுமன்றி தென்ன த்துக்கே வழிகாட்டியாக வேண்டும் என்ற எண்ணம் வளரத்தக்க வகையில்—தெலுங்கு மொழியுடன் ஆங்கிலத்திலும் அண்ணு மணி விழா மலர் தயாராகி வருகிறது. இம்மலர், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், காங்கிரசுத் தலைவர் வாழ்த்த—கலைஞர், மேயர் முதலியோர் கட்டுரை எழுத—அழகிய முகப்புடன் வெளிவரவிருக்கிறது. இதற்கான ஆக்கப் பணியில் தோழர் விருதை பாண்டியன் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவின் மேற்குப் பகுதிகள் தொடர்பற்றுவிட்டன

பெருமழையினுல் ஏற்பட்ட விளைவு

பம்பாய், ஆக. 6—

இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தினுல், இரயில்—சாலைப் போக்கு வரத்து—தொலைபேசியின் மூலம் தொடர்புகொள்ளல் ஆகிய அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தப்தி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது சூரத் நகராகும். நாட்டிலுள்ள மற்ற பகுதிகளுக்கும்—இந்நகருக்கும் எத்தகைய தொடர்புமில்லாத நிலை, இந்த வெள்ளப் பெருக்கத்தினுல் ஏற்பட்டிருக்கிறது.

சூரத்துக்கும்—பரோடாவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினுல், பம்பாய் நகருக்கும்—டெல்லிக்கும், பம்பாய் நகருக்கும்—அகமதாபாத்துக்கும் இடையில் உள்ள சாலைப் போக்கு வரத்து, இரயில் போக்குவரத்து, டெலிபோன் தொடர்புகள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தப்தி ஆற்று வெள்ளம், அபாய அளவையும் மீறி, 102 அடி நீர் மட்டத்தை எட்டவே, சூரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் மீட்சிப் பணிகளை மேற்கொள்ள இராணுவம் முன்வந்திருக்கிறது.

சூரத்—பரோஜ் பகுதியில் 200 கிராமங்களிலும், இரு நகரங்களிலும் சுமார் 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தப்தி—நர்மதை ஆறுகளின் வெள்ளத்தினுல் ஏற்பட்ட சேதம் ரூ 5 கோடிக்கு மேல் இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

டாக்டர்களின் தவறின் விளைவால் ஓர் உயிர் பலி!

பம்பாய், ஆக. 6—

கவனக் குறைவு காரணமாக 11-வயதுள்ள பெண் உயிரிழக்க நேர்ந்த நிகழ்ச்சி, பம்பாயில் நடைபெற்றிருக்கிறது.

போலீசாரின் தகவல்படி, இந்திரா கிருஷ்ணு என்னும் பெண், மார்பு நோய் பரிசோதனைக்காகப் பம்பாய் பாபா மருத்துவ மனையில் ஆக. 2-ம் நாள் அனுமதிக்கப்பட்டாள்; ஆக. 5-ம் நாள் அவளுக்கு உடற் பரிசோதனை நடைபெற்றிருக்கிறது.

ஆக. 3-ம் நாள் வேறொரு பெண் அதே வார்டில், தொண்டைச் சதை அறுவைச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிருள்; அப்பெண்ணுக்கும் ஆக. 5-ம் நாளன்றே அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடாகி இருந்தது.

இந்த இரு பெண்களும், வேறு நான்குபேருடன் அறுவைச் சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

அறுவைச் சிகிச்சை செய்யப்படும் அறையிலேயே, மார்புப் பரிசோதனைக்கான 'எக்ஸ்ரே' சாதனமும் அமைக்கப்பட்டிருந்ததால், அந்த இரு பெண்களையும் ஒரு அறைக்கு அழைத்துச் சென்றனர்.

டாக்டர்களின் கவனக் குறைவின் காரணமாக, மார்புப் பரிசோதனைக்காக வந்த பெண்ணுக்குத் தொண்டைச் சதை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுவிட்டது; அறுவைச் சிகிச்சை முடிந்ததும் அந்தப் பெண் வெளுத்துப் போய்விட்டாள்; அப்பெண்ணின் நாடித் துடிப்பு குறைந்து விட்டது.

டாக்டர்கள் விழிப்புப் பெற்றனர்; அப்பெண்ணைக் காப்பாற்ற முயன்றனர்; ஆனல் அப்பெண், பரிதாபகரமாக மரணமடைந்தாள்.

அதற்குப் பிறகே டாக்டர்கள், தவறி வேறொரு பெண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருப்பதை உணர்ந்தனர்!

ஒருமித்த முடிவைக் காண இயலவில்லை

கம்பெனிகள் நன்கொடைமீது காங்கிரசார் கருத்துவேற்றுமை

புதுடில்லி, ஆக 6—

இன்றுகூடிய நாடாளுமன்றக் காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், அரசியல் கட்சிகளுக்கு கம்பெனிகள் நன்கொடை அளிப்பதைத் தடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கின்ற மசோதாவின்மீது ஒருமித்த முடிவுகாண முடியவில்லை.

இதற்குமுன்பு நடைபெற்ற கூட்டத்திலும்கூட இது குறித்துப் பலத்த கருத்துவேற்றுமை காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நிலவிவந்தது.

"கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்படும் இம்மசோதா, வெளிநாடுகளிலிருந்து பணம் பெறும் அரசியல் கட்சிகளுக்குத்தான் சாதகமாக இருக்கும்" என்ற கருத்தை, காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் கொண்டிருக்கின்றனர்.

கம்பெனிகள் அளிக்கும் நன்கொடைகள், காங்கிரசுக் கட்சியினரை இலஞ்ச ஊழலில் ஈடுபடுத்தியிருக்கிறது என்றும் அப்படிக் கம்பெனிகளிடம் நன்கொடை பெறுவதால் ஒருசில தொழிலதிபர்களின் பொருளாதார நிலை உயருகிறது என்றும், சில காங்கிரசுக்காரர்கள், 'இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும்' என்று கூறுவதற்குள் முக்கிய காரணங்களாகும்.

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடைகள் வழங்குவது தடைசெய்யப்படுமானல், கறுப்புப்பணம் நாட்டிலே சர்வசாதாரணமாக உலவும்" என்றும் சில காங்கிரசு உறுப்பினர்கள் கருதுகின்றனர்கள்.

நில நடுக்கத்தால் மக்களின் பீதி

ஜப்பானிலும் மணிலாவிலும் ஏற்பட்டுள்ள நிலைமை

செவ்வாயன்று ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக, ஜப்பானிலும், மணிலாவிலும் மக்கள் பீதியடைந்திருக்கின்றனர்.

நாள் முழுவதும் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் காரணமாக ஜப்பானின் தெற்குப் பகுதிகளில் சாலைப் போக்குவரத்தும், இரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. செய்திப் போக்குவரத்துக்களும் கடுமையான சேதத்துக்குள்ளாகியிருக்கின்றன.

இந்த நில நடுக்கம் காரணமாகச் சிலர் இறந்தும், பலர் காயமடைந்தும் உள்ளனர்.

மணிலாவில்

மணிலாவிலும் சென்ற வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நில நடுக்கத்தின் தாக்குதலால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

30-இலட்சம் மக்கள் வாழும் இந்நகரில் ஏற்பட்ட மனித இழப்பு 232-ஐ எட்டியிருக்கிறது.

பிலிப்பைன்ஸ் குடியரசுத் தலைவர், அலுவலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து உத்தரவிட்டிருக்கிருர்.

மக்கள் இருப்பிடம் நோக்கி அதிகாரிகள்

கழக ஆட்சியில் குறைகள் கவனிக்கப்படும் விதம்

மதுராந்தகம், ஆக. 5—

மதுராந்தகம் தாலுகாவில், கிராம மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து உடனடியாக அது பற்றி முடிவு செய்யும்பொருட்டு, அதிகாரிகள்—சட்டமன்ற உறுப்பினர் அடங்கிய குழு ஒன்று, பல கிராமங்களுக்குச் சென்றது.

இந்தக் குழுவில், மதுராந்தகம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கௌளத்தூர் கோதண்டம், மதுராந்தம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பி. சானகிராமம், செங்கற்பட்டு துணைக் கலெக்டர் ரங்கா ராவ், கால்நடை அதிகாரி விசயராகவன், வட்டார எஞ்சினியர் சிவானந்தம், மதுராந்தகம் தாசில்தார் என். நாகராசன், மதுராந்தகம் ஒன்றிய்பு ஆணையர் கருணாநிதி ஆகியோர் இருந்தனர்.

வழக்குகள்

திரும்பப் பெறப்பட்டன

சென்னை, ஆக. 6—

சென்னை நகரில் மார்ச் திங்களில் நடந்த மாணவர்—பஸ் ஊழியர் மோதல்கள் சம்பந்தமாகத் தலைமை மாகாண மாஜிஸ்ட்ரேட் முன் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இவற்றில் இரண்டு வழக்குகள் மாணவர் மீதும், ஒன்று பஸ் ஊழியர் ஒருவர் மீதும் தாக்கல் செய்யப்பட்டவை.

திருவள்ளூர் வட்ட தி.மு.க.

மறு தேர்தல்

திருவள்ளூர் வட்ட தி. மு. க. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் 11—8—68 ஞாயிறு காலை 10-மணிக்கு திருப்பாசூர் பயணியர் விடுதியில் தேர்தல் நடைபெறும்.

பொருளாளர் பொறுப்புக்கு மட்டும் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தங்கள் விண்ணப்பத்தாள்களை உரிய கட்டணத்துடன் 9—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வட்டக் கழக--வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்கள்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஒத்திவைக்கப்பட்ட கீழ்க்காணும் வட்டக் கழகம்---வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகம் ஆகியவைகளின் தேர்தல்கள் 11--8--68 ஞாயிறு காலை 10 மணிக்குக் கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெறும் :---

வட்டம்	இடம்	ஆணையாளர்கள்
திருப்பூர் பெருநகரம்	பயணியர் விடுதி, குமரன் ரோடு, திருப்பூர்	டி. கே. கபாலி எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி.
உடுமலை வட்டம்	பயணியர் விடுதி, உடுமலை	பி. எஸ். மணியம் எம் எல்.ஏ.
பொள்ளாச்சி வட்டம்	வெங்கடேசுவரா காலனி, சட்டமன்ற உறுப்பினர் விடுதி	எம். குமார்
ஈரோடு வட்டம்	பெரியார் மாளிகை, ஈரோடு	சா. கணேசன் எம்.சி.
நாமக்கல் வட்டம்	பி. எஸ். ஆர். திடல், நாமக்கல்	ஓ. எஸ். பாலசுந்தரம், க. அன்பிற்கரசன் எம்.சி.
இராசிபுரம்	ஏசுநாதர் ஆலய மண்டபம், இராசிபுரம்	நீலநாராயணன்
உத்தமபாளையம் வட்டம்	பயணியர் விடுதி, உத்தமபாளையம்	கரிகாலன் எம்.சி
மேலூர் வட்டம்	பயணியர் விடுதி, மேலூர்	எஸ். வி. வேலு
அருப்புக்கோட்டை	பயணியர் விடுதி, அருப்புக்கோட்டை	காவேரிமணியம், திருப்பதி பி.ஏ.பி.எல்.
சிவகங்கை	பயணியர் விடுதி, சிவகெங்கை	மைனர் மோசஸ், தமிழ்மணி எம்.சி.
கரூர்	பயணியர் விடுதி, கரூர்	மு. வரதராசன்
விழுப்புரம் வட்டம் (அவைத் தலைவர் பதவி தவிர மற்ற எல்லா பொறுப்புகளுக்கும்)	பயணியர் விடுதி, விழுப்புரம்	கோமகன்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அடிப்படையற்றதாம்--விஷமத்தனமானதாம்!

வேடிக்கைக்காக இதனைச் செய்திருக்கக்கூடுமாம்

புதுடில்லி, ஆக. 6—

அகமதாபாத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் மத்திய அமைச்சரவையிலிருந்து இராஜினாமா செய்துவிட்டதாக வெளியான செய்தியை மொரார்ஜியின் நெருங்கிய வட்டாரங்கள் மறுத்தன.

"இச்செய்தி முழுக்க அடிப்படையற்றது; விஷமத்தனமானது; கெடுநோக்குடையது"என்று அவர்கள் கூறினர்.

இதுகுறித்து தேசாயிடம் கேட்கப்பட்டது; சிரித்துக்கொண்டே அவர், அப்பத்திரிகையின் ஆசிரியர், வெளியான செய்தி சம்பந்தமாகத் தம்முடன் தொலைபேசி மூலம் பேசியதாகக் குறிப்பிட்டார்.

"வேண்டுமென்றே யாரோ வேடிக்கைக்காக இக்குறும்புத்தனத்தைச் செய்திருக்கக்கூடும் எனத் தெரியவருகிறது" என்று தேசாயைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் கூறினர்.

அகத்தீசுவரம் வட்டக் கழகத் தோழர்களுக்கு :

11—8—68 மாலை 3 மணிக்கு குமரி மாவட்டம் அகத்தீசுவரம் வட்டச் செயலாளர் மறு தேர்தல் தென்கம்புதூர் தியேட்டரில் நடைபெறும்; தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் விலகிவிட்டதால், புதிய விண்ணப்பத் தாள்களை 9---8---68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில், வேட்பாளர்களாக நிற்க விரும்புவோர் உரிய கட்டணத்துடன் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

உயிருடன் புதையுண்டனர்!

சேலம், ஆக, 6—

மணலுக்காகக் குழு தோண்டுகையில் ஒரு பக்கத்தில் சரிந்துவிடவே, அந்த இடத்திலேயே உயிருடன் இருவர் புதையுண்ட நெஞ்சுருக்கும் செய்தியொன்று தெரியவந்திருக்கிறது.

சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற இவ்விபத்தில் காயமடைந்த மேலும் மூவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.